விலை ரூபா 5.00 Registered as a News Paper in Sri Lanka பக்கம் எட்டு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

# வலம்புரி
VALAMPURI

மங்கையர் மனம்
கொள்ளை கொள்ளும்
தங்க நகைகளுக்கு
சாரங்கா
நகைமாடம்
177/4கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P;- 2480

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 8 சனிக்கிழமை (24-8-2002) தொலைபேசி 3378 ஒலி 248

### சமாதானப் பயணத்தில் முக்கிய நிகழ்வு

# அரசு - புலிகள் முதற்கட்டப் பேச்சு

# செப். 16, 17, 18 ஆம் திகதிகளில்

## நோர்வே அரசு அறிவிப்பு

(ஒஸ்லோ)

**இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான முதலாவது கட்ட சமாதானப் பேச்சுவார்த்தை, அடுத்த மாதம் 16ம், 17ம், 18ம் திகதிகளில் தாய்லாந்தில் நடைபெறுமென்று நோர்வே அரசாங்கம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.**

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை அடுத்த மாதம் 16ந் திகதி முதல் 18ந் திகதி வரையில் தாய்லாந்தில் நடைபெறுமென்று நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைவாக தாய்லாந்தில் ஆரம்பமாகவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை, அங்கு எந்நகரத்தில் இடம் பெறுமென்ற விபரம், பேச்சு ஆரம்பமாகும் சில தினங்களுக்கு முன்னர் அறிவிக்கப்படுமென்றும் எரிக்சோல் ஹெய்ம் மேலும் தெரிவித்துள்ளார்.

முதற்கட்டப் பேச்சுக்களின்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரன் பாலசிங்கம் விரைவில் வன்னிவருவார்

(லண்டன்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எந்நேரமும்வன்னிக்கு வரலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சமாதானப் பேச்சுக்களுக்கான திகதி நோர்வேஅரசால் அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து புலிகளின்சார்பில் பேச்சுக்சளில் ஈடுபடுவோர் தொடர்பாகவும் அங்கு ஆரா

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஹெவ்டேஇன்று வன்னிபயணம்

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத்தலைவர்மேஜர் ஜெனரல் டொன்பியுறு ஹெவ்டே இன்று வன்னிக்கு செல்லவுள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கைதிகளின் 20 வழக்குகள்

## சு. ப. தமிழ்ச்செல்வனுடன் பேணாட்குணதிலகசந்திப்பு

(வவுனியா)

சமாதான செயலகத்தின் செயலாளர் நாயகம் பேணாட் குணதிலக நேற்று தமிழீழவிடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

கிளிநொச்சி அரசியல்துறை நடுவப்பணியகத்தில் முற்பகல்9.15மணிமுதல் 11மணி வரை இருதரப்புப்பேச்சுக்களும்நீடித்தன

இப்பேச்சுக்களில் பேணாட் குணதிலகாவின் செயலாளர் மற்றும் கொழும்பு நோர்வே தூதரக அதிகாரி தோமஸ் ஆகியோரும் புலிகளின்தரப்பில் அரசியல்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுடன் அரசியல்பிரமுகர்களான தங்கன் விசு ஈழமாறன் மற்றும்

(8 ம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடை நீக்கம் விரைவில் அறிவிக்கப்படும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்க அறிவிப்பை அரசாங்கம் மிக விரைவில் வெளியிடவுள்ளது.

அடுத்த மாதம் 5ந்திகதிக்கு முன்னர் விடுதலைப்புலிகள் மீதான தடைநீக்க அறிவிப்பை, அரசாங்கம் உத்தியோகபூர்வமாக வர்த்தமானியில் வெளியிடுமென்று நம்பப்படுகிறது.

இதேவேளை தடைசெய்யப்பட்ட அமைப்பாக பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள மாட்டோமென்று விடுதலைப்புலிகள் உறுதியாக தெரிவித்துள்ளமையும், பேச்சுவார்த்தைக்கு பத்து நாட்களுக்கு முன்னர் தடைநீக்க அறிவிப்பு வெளியிடப்படுமென்று அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## ஜோசப்-எரிக்சோல் நேற்று

# சட்டமா அதிபரினால் வாபஸ்

## ஐந்து பேருக்கு விடுதலை கிடைத்தது

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாகச்சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளின் 20 வழக்குகளை சட்டமாஅதிபர் வாபஸ்பெற்றுள்ளார்.

இந்த வழக்குகளில் சம்பந்தப்பட்ட இளைஞர்,யுவதிகள் தென்பகுதிச் சிறைகளில் இருந்து விமான மூலம் யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டு யாழ் மேல்நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிபதி கே.பி.எஸ். வரதராஜாவினால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

அ.கலைச்செல்வி (வயது-18), வி.வசந்தகுமார் (வயது-23) புலோலியைச் சேர்ந்த ச.சத்தியரூபன்(வயது 24) நல்லூரைச் சேர்ந்த நடராஜா கோமதி(வயது 31) ஆகியோரே விடுதலைசெய்யப்பட்டனர். மட்டக்களப்பைச் சேர்ந்த மகேஸ்வரன் குகதாசன் (வயது-25) என்பவர்

(8ஆம் பக்கம் பார்க்க

# ஜோசப்-எரிக்சோல் நேற்று நோர்வேயில் சந்திப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம் சமாதானத் தூதுவர் எரிக் சோல்கைய்மை நோர்வேயில் நேற்று சந்தித்துப் பேசியுள்ளார்.

சமாதானத்தூதுவர் எரிக் சோல்கைய்மின் அலுவலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை காலம் தாழ்த்தாது மேற்கொள்ளுமாறு ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி கோரிக்கை

(8ம் பக்கம் பார்க்க)

ஹற்றன் நஷனல் கடன் வழங்கும் நோக்கங்கள்

சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான கடன் திட்டம்

- சிறுதொழில் தொடங்குதல்
- பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளை மறுசீரமைத்தல்.
- விவசாயத்திற்காக – குறுங்கால, நடுத்தரகால கடன்கள்.
- கால்நடை வளர்ப்பு.
- வேறு சுயதொழில்கள்.

மேலதிக விபரங்களுக்கு

HNB யாழ்ப்பாணக்கிளையை நாடுங்கள்

ஹற்றன் நஷனல் வங்கி

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

யாழ்ப்பாணக்கிளை

இல. 212, 214 ஆஸ்பத்திரி வீதி,

தொலைபேசி: 021-2787, 021-3463

தொலைநகல்: 021-3194

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்


### தேவை

தொலைத் தொடர்புநிலையத்திற்கு படித்த பெண்பிள்ளை தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; சுமன் தொலைத் தொடர்பு நிலையம் ஆலடிச்சந்தி ஓட்டுமடம். T P 2851

(5842)

### விற்பனைக்கு

யாழ். நகரில் அத்தியாவசிய தேவைகளுக்கு வசதியான (ஆசனக்கோவிலுக்கு அண்மையில், இலக்கம் 181, குருசோ வீதியில் உள்ள மூன்று பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு J. E. இராசநாயகம் 40, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (5848)


### அ.அட்டைகள் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

432 எ, சமரபாகு, வல்வெட்டியைச் சேர்ந்த யோகம்மா ஏகாம்பரம் என்பவரின் தேதிய அடையாள அட்டை விசேட அடையாள அட்டை என்பன கண்டெக்கப்பட்டு வலம்புரிக் காரியலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் அலுவலக நேரத்தில் வந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

## இராசி பலன்

ஆவணி 8 சனி
துதியை முழுவதும்
அமிர்தம் மு ப8 45
இரகுகாலம் 9 05-10.35
நல்லநேரம் 3.C5-4.35

**மேடம்**
ஆழ்ந்தசிந்தை, பெரியோர் ஆசி, நண்பர்உதவி, நலல முயற்சி

**இடபம்**
பிதாசிந்தை, பணவிரயம் மனக்குழப்பம், கர்வம்உண்டாதல

**மிதுனம்**
பெருள்வரவு, மனமகிழ்ச்சி, நண்பர்கள்சந்திப்பு தொழில்சிந்தை

**கடகம்**
கடினஉழைப்பு, உற்சாகம், தொழில்நன்மை, சுபநிழ்வு

**சிங்கம்**
திட்டமிடல், வீண்பயம் உடல்உழைப்பு, தெய்வசிந்தை

**கன்னி**
நல்ல உணவுகிடைத்தல், வீண்தொல்லை, எதிர்ப்பு உடல்அசதி

**துலாம்**
திடீர்ப்பயணம், பணவரவு கௌரவம் உண்டாதல், அபூர்வசந்திப்பு

**விருச்சிகம்**
பகைவர்விலகுவர், நோய் குணமடைதல், பணவரவு திடீர்பயணம்

**தனுசு**
தாழ்வுநிலை, வியாபார மேன்மை, மனக்கஷ்டம்

**மகரம**
கல்விமேன்மை, ரோகபயம் மனப்பயம், அவநம்பிக்கை

**கும்பம்**
அந்நியர்சந்திப்பு, கூட்டு முயற்சி, வாக்குமேன்மை பொருள்சேர்க்கை

**மீனம்**
மாதர்நட்பு, காரியத்தடை பணவிரயம், கௌரவக் குறைவு

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# பாடசாலைகளை விட்டு வெளியேறும் படையினர்; அருகில் நிலை கொள்கின்றனர்

## அம்பாறை மாவட்ட க.கா.கு. தெரிவிப்பு

(கல்முனை)

பாடசாலைகளிலிருந்து படை நிலைகள் முற்றாகஅகற்றப்பட்டுள்ளபோதிலும், பாடசாலைகளுக்கு அருகாமையிலுள்ள தனியார் காணிகளிலும் கட்டடங்களிலும் படை நிலைகள் அமைந்திருப்பது குறித்து, பெற்றோர்மத்தியில் அச்சம் தோன்றியிருப்பதாக இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவின் அம்பாறை மாவட்ட தலைமை கண்காணிப்பாளர் எரிக்கி பிளட்டன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம்கல்முனையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மகாநாட்டில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

காஞ்சுரங்குடா, கண்ணகிபுரம் ஆகிய பாடசாலைகளிலிருந்து வெளியேறிய விசேட அதிரடிப்படையினர்.

அருகிலுள்ள காணிகளிலும் கட்டடங்களிலும் முகாம்களை அமைத்துள்ளதால், பாடசாலைக்கு செல்ல ஆசிரியர்கள் மாணவர்கள் தயக்கம் காட்டி வருகின்றனர். எனினும் இது உடன்படிக்கையை மீறும் சம்பவமல்ல,

விடுதலைப் புலிகள் வரி அறவிடுவது தொடர்பாக எமக்கு புகார்கள் கிடைத்துள்ளன. சிலபுகார்களை பற்றுச்சீட்டுக்களுடன் கிடைக்கப்பெற்றுள்ளன;

இது தொடர்பான புகார்களுடன் பற்றுச் சீட்டுக்கள் இணைக்கப்பட்டாலும் அது விடுதலைப் புலிகளினால்வழங்கப்பட்டதாஎன்பதை உறுதிப்படுத்தத்தக்க ஆதாரங்கள் எவையும் இல்லை.

குறிப்பிட்ட பற்றுச் சீட்டுக்களில் 'நன்கொடை' என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்தவிடயத்தில் நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது என்றும் பிளட்டன் மேலும்தெரிவித்துள்ளார்; (இ)

# அச்சுவேலி கிழக்கு பயிர்செய் நிலங்களில் சட்டவிரோத கல் அகழ்வு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி கிழக்குப் பகுதியில் பரவைக் கடலை அண்டிய பிரதேசங்களில் சட்டவிரோதமான முறையில் பரவலாக கல் அகழப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதனால்பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்துகின்ற இந்நிலங்களில் கடல் நீர் உட்புகும்நிலை ஏற்பட்டுள்ளதுடன், பயிர்ச்செய்கை நடவடிக்கையும் கேள்விக் குறியாகியுள்ளதாக காணி உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மேற்படிபகுதியில் உள்ள கல் உடைக்கும் ஆலைகளில் இங்குஅகழப்படும் கல் விற்பனை செய்யப்படுவதனால் இச் சட்ட விரோத நடவடிக்கைக்குகல்உடைக்கும் ஆலை உரிமையாளர்களும் உடந்தையாக செயற்படுகின்றனரோ என சமூக நலன் விரும்பிகள் பலரும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இது இவ்வித மிருக்க இவ்வாறான சட்டவிரோத கல், மண் அகழ்வில் ஈடுபட வேண்டாம் என தமிழீழவிடுதலைப் புலிகள் ஏற்கனவேஎச்சரிக்கை விடுத்திருப்பதும் தெரிந்ததே. (உ)

## எழுத்துப் பரீட்சை

வட இலங்கைச் சங்கீத சபையின் தரம் II-தரம் VI வரையான எழுத்துப்பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7, 8 ஆம் திகதிகளில் குடாநாட்டில் 14 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு குடாநாட்டில்இருந்து 6 ஆயிரம் பேர் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது; (உ-19)

## விழா ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை சிவாஜி கலைக்கழகத்தினால் இன்று நடத்தப்படவிருந்த சிவாஜி கணேசன் ஞாபகார்த்தவிழா, தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# சிறுத்தைகள் உலாவும் தோட்டத்தில் தொழில் செய்யுமாறும் நிர்ப்பந்தம்

(கம்பளை)

அடபாகே சங்குவாரி தோட்ட மேற்பிரிவு நீண்டகாலம் துப்புரவுசெய்யப்படாமையினால் காடாக மாறியுள்ளதுடன், இத் தோட்டத்தில் தற்போது சிறுத்தைப் புலிகளும் நடமாடி வருகின்றன.

இந்நிலையில் மேற்படி தோட்டத்திற்குச் சென்று கொழுந்து பறிக்குமாறு பெண் தொழிலாளர்களை தோட்ட நிர்வாகம் நிர்ப்பந்தித்து வருவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அங்கு உலாவும் சிறுத்தைப் புலிகள் பெருமளவு பசுமாடுகள், நாய்கள் என்பவற்றைக் கொன்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# சட்டதிட்டங்களை மதிக்காத பொலிஸாருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் சட்டதிட்டங்களைமதித்து நடப்போர்மீது, பொலிஸார் துன்புறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும என்று உள்துறைஅமைச்சர் ஜோன் அமரதுங்கதெரிவித்துள்ளார்.

இவ்வாறான உத்தியோகஸ்தர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு உயர்அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பொலிஸார் பொறுப்பற்று பொதுமக்களைதாக்கிவருவது குறித்து அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதைஅடுத்தே இவ்உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மக்களை மதித்துநடக்கத் தவறும் எந்தவொரு பொலிஸார்மீதும் உடன் விசாரணைகளைநடத்தி அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறும் உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (உ-8)

# கரையோரப் பகுதி குடிநீர் விநியோகத்தில் தடங்கல்

(திருநெல்வேலி)

வடமராட்சி கரையோரப் பகுதி குடிநீர் விநியோகம் கடந்த சில நாட்களாகத் தடைப்பட்டுள்ளது.

குடிநீர் விநியோகம் தடைப்பட்டமைக்கான காரணம் என்னவென்று தெரியவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (உ-43)

# முஸ்லிம் குடும்பங்கள் வன்னியில்மீள்குடியமர்வு

(கொழும்பு)

கடந்தகாலங்களில் வன்னிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தகுடும்பங்கள் அங்கு மீளக்குடியமர்ந்து வருகின்றன.

இதுவரையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 75 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன;

எனினும், மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு அரசாங்கம் இதுவரை எவ்வித உதவிகளையும்செய்யவில்லை எனவும்,

அவர்கள் குடிசைகளை அமைத்து தங்கியிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## பருத்தித்துறை-கிளிநொச்சி

# தனியார் பஸ்சேவை படையினரால் நிறுத்தம்

(திருநெல்வேலி)

பருத்தித்துறை மருதங்கேணி ஊடாக கிளிநொச்சி வரை நடாத்தப்பட்டு வந்த தனியார் பஸ்சேவையை நேற்று முன்தினத்திலிருந்து படையினர்நிறுத்தியுள்ளனர்.

இதனால் இப்பகுதி மக்களின் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டதுடன் மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு செல்லும்ஊழியர்கள் போக்குவரத்து வசதியின்றி சிரமமுற்று வருகின்றனர். (உ-43)

# யுகதக்ம கண்காட்சியில் புலிகளின்விற்பனைக்கூடம்

(திருகோணமலை)

திருகோணமலையில் நடைபெற்று முடிந்த ''யுகதக்ம'' காண்காட்சியில் விடுதலைப் புலிகளின் நிதர்சனப் பிரிவும் விற்பனைக் கூடம் ஒன்றினை நடத்தியது

இதில் ஒலி-ஒளி நாடாக்கள் சி. டி. க்கள் விற்பனை செய்யப்பட்டன.

5 இலட்சத்திற்கும் அதிகமான விற்பனை அங்கு இடம் பெற்றதாகவும், தினந்தோறும் பெருமளவு உள்நாட்டு, வெளிநாட்டு மக்கள் தமது விற்பனைக் கூடத்திற்கு வருகைதந்து விற்பனைப் பொருட்களைப் பெற்றுச் சென்றதாகவும் புலிகள் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அமைச்சர்களின பாதுகாப்பு அதிகாரிகளும் பாதுகாப்புப்படை வீரர்களும் கூட இவ் விற்பனைக் கூடத்திற்கு வருகைதந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

இது இவ்வாறிருக்க, கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதல், ஆனையிறவுப் படைமுகாம் தாக்குதல் ஆகியவற்றின்ஒலி, ஒளி நாடாக்களே அங்கு அதிகம் விற்பனையானதாகவும் அறியப்படுகிறது. (உ).

## வவு.வடக்கில்

# மீள்குடியேற்றம் பற்றி நேரில் சென்று ஆராய்வு

வவுனியா வடக்கு, ஓமந்தை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களைப் பார்வையிடுவதற்காக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் அடங்கிய குழுவொன்று இன்று அங்கு செல்லவுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இப்பிரதேசங்களை விட்டு வெளியேறிய மக்கள், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதை தொடர்ந்து மீளகுடியேற விருப்பம் தெரிவித்துள்ளதையடுத்து, மீள் குடியேற்றம் தொடர்பாக ஆராய்வதற்காகவே இக்குழு அங்கு செல்லவுள்ளது.

சேமமடு, பன்றிக்கெய்த குளம், ஆறுமுகத்தான் குளம், நொச்சிக் குளம் போன்ற கிராமங்களுக்கு இக்குழு நேரடியாக செல்லவுள்ளது. (உ-8)

## பொதுமக்களிடம் ஆலோசனை

தேசிய கல்வி ஆணைக்குழு, பொதுக் கல்வி சம்பந்தமான தேசிய கொள்கைகளில் மாற்றம் செய்வது பற்றி பொதுமக்களிடமிருந்து ஆலோசனைகளை எதிர்பார்க்கிறது.

தேசிய சேவைகள், உலகளாவிய தேர்ச்சிகள் என்பவற்றை கருத்திற் கொண்டு இம்மாற்றம் கொண்டு வரவுள்ளதாக தேசியக் கல்வி ஆணைக் குழுத் தலைவர் பேராசிரியர் ஆர் பி. குணவர்த்தனா தெரிவித்துள்ளார் (உ-10)

## நல்லூரான் திருவடிக்கு-12



### நாடினோம் அருள் செய்வாய்

அல்லலா லவதி யுற்றே
ஆவி சோர்ந் தலறு கின்றோம்
தொல்லையாற் றுன்ப முற்றே
துடி துடித் தலறு கின்றோம்
ஒல்லையில் வருவா யோடி
உத்தமி உமையாள் மைந்தா!
நல்லை வாழ் நம்பா! கந்தா!!
நாடினோம் அருள் செய்வாயே!

சமூக இரத்தினம்
எம். கே. இளையப்பு ஜே.பி

### வேலவனின் தாள் பணிந்தார்

தங்கத் திரு முருகன்
தனிவேலின் மகத்து வத்தை
சிங்களத்து மக்க ளெல்லாம்
சிந்தையிலே கொண்டு விட்டார்!
அங்கவனின் தத்து வங்கள்
அன்னவரைப் பிணைத் திழுக்க,
வெங்கொடுமை தமை மறந்து
வேலவனின் தாள் பணிந்தார்!

தென் நல்லை குபகிரதன்

### குறமகளைக் காத்தவர்

சுட்ட பழம் கொடுத்து சுவைத்தமிழை வென்றவனே
வட்ட நிலவையா உன்தன் வதனமுகம்- அன்று
பட்டத்து யானை போல் அண்ணனை அனுப்பி-
உன்னிடம்
கிட்ட வந்த குறமகளைக் காத்தது தான் காதலப்பா

வட்டூர் வரதர்

### உன்பார்வை ஒன்றே...

ஐயா! அருள் நல்லை அரசே! எம்மை
அவலக் கடல் நீக்கிக் கரைசேர்!

வையாபுரி ஆளும் இறையே! உனை
வணங்குபவர்க்கு ஏது குறைவே?

சித்தர்கள் வாழ்ந்த இந்தப் பூமி இன்று
சிறுமைப் படுவதென்ன நீதி?
முத்துக்குமரா' உன் பார்வை- ஒன்றே
மோதும் துயர்க்கு உற்ற தீர்வே! முருகா!

நிவேதிதா

### அல்லல்கள் அறுப்பாயே!

பாரெல்லாம் சுகமளித்த
பார்வதியின் மைந்தா நீ!
ஊரெல்லாம் சுகமளித்து
உறவுகளை காப்பாயே!
ஈராறு தோளுடையானே
இன்னல்கள் போக்கியெமக்கு
இன்பங்கள் அருள்வாயே!
ஆனந்த மயிலேறும் அத்தியா தரே!
ஆறாத உள்ளங்களை ஆற்றி
அவர் அல்லல்கள் அறுப்பாயே!

தென் மட்டுவில்- தமிழிதயம்

### போற்றுகின்றோம் பொற்பாதம்

நித்திய பேரின்பம் நேரும் திருமுருகா!
நேர்மனம் வாக்கு இன்னும் நித்தம் முழு உடம்பால்
சத்திய வேதவழிச் சாய்ந்தால் தலை உனக்கு
சாருமே சாந்திதினம் தண்ணார் சமாதானம்
வைத்தவுன் பேரருளால் மேவும் வளமனைத்தும்
வாழுமே எம்மினமும் மற்றும் உள இனமும்
புத்திஜீவிகளாக்கு பூசல் தினமகற்று
போற்றினோம் பொற்பாதம் பொங்கும் புகழ்
- தினமும்

கச்சாயூர் பண்டிதர் கவிஞர்
சுகசிவன்

## இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதான முறையில் தீர்வு காண

# அமெரிக்கா தொடர்ந்தும் பங்களிக்கும்

### ரிச்சட் ஆமிடேஜ் சரசாலையில் தெரிவிப்பு

(தென்மராட்சி)

இலங்கையின் இறைமையை யும் ஒருமைப்பாட்டையும் பேணும் வகையில் இனப்பிரச்சினைக்கு சமாதானமுறையில் தீர்வொன்றைக் காண்பதற்காக அமெரிக்கா தொடர்ந்தும் அதன் முழுமையான பங்களிப்பை வழங்கும்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் சரசாலைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க பிரதிராஜாங்க அமைச்சர் ரிச்சட் ஆமிடேஜ் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் பேச்சுக்கள் இடம் பெறுவதை அமெரிக்கா வரவேற்கின்றது. தென்மராட்சி பிரதேசத்தில்மக்கள் மீளக்குடியமர்வதற்கும் கிராம மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு மிதிவெடிகள், கண்ணி வெடிகள் அகற்றப்படாமை பெரும் தடையாக இருப்பதை நாம் அறிவோம்.

எனவே கண்ணி வெடி, மிதி வெடி அகற்றும் விடயம் தொடர்பாக அமெரிக்கா மிகுந்த அக்கறையுடன் இருக்கின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினை அமைதியானமுறையில் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் அமெரிக்காவுக்கு உண்மையான அக்கறை உண்டு. இதற்கு எமது ஆதரவு இலங்கைக்கு எப்போதும் உண்டு என பிரதி ராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டதுடன்,

சரசாலையில் மிதிவெடி, கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்க மொசாம்பிக் நிபுணர்களையும் அதிகாரிகளையும் பாராட்டினார். அத்துடன் துன்பப்படும் மக்களுக்கு நீங்கள் செய்யும் பெரும் சேவையாக இதனைக்கருதிச் செய்யவேண்டும் என்றும் கூறினார்.

(இ-77-6)

# சமாதான தியான நிகழ்வில் தாக்கு பல்கலை மாணவர்களும் பங்கு!

(கொழும்பு)

கண்டியில்நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சமாதான தியான நிகழ்வில் தாக்குதல் நடத்தியவர்களுக்கும்அரசியல் கட்சிஒன்றுக்கும் தொடர்பு இருப்பதாக அப்பகுதியில் இருந்து வரும்தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வோதயஇயக்கம்ஒழுங்கு செய்திருந்த மேற்படி சமாதான தியான நிகழ்வில் தாக்குதலில் ஈடுபட்டவர்களில் பல்கலைக்கழக மாணவர்களும் அடங்கியிருந்ததாக கூறப்படுகிறது.

இதேவேளை, அனுராதபுரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமாதான தியான நிகழ்வின் முதல்நாள் தனது வீடு மீது நிகழ்த்தப்பட்ட குண்டுத்தாக்குலுக்கும், இத்தாக்குதலுக்கும் தொடர்பிருப்பதாக சர்வோதயத் தலைவர் ஏ.ரி ஆரியரட்ண தெரிவித்துள்ளார்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் இவ்வேளையில், சர்வோதய அமைப்பினர் நாடு தழுவிய ரீதியில் சமாதான தியான நிகழ்வுகளை நடத்தி வருவது தெரிந்ததே.

(உ-8)

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படிக் கூட்டத்தில், அரச திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-75)

### எம்.எஸ். எவ். வைத்தியக்குழு குப்பை எரிப்பதற்கு இயந்திரம் அன்பளிப்பு

(தென்மராட்சி)

பிரான்ஸ்மருத்துவ சிகிச்சைக் குழுவாகிய எம். எஸ். எவ். குப்பைகூழங்களை எரிப்பதற்கான இயந்திரம் ஒன்றினை மந்திகை ஆதாரவைத்தியசாலைக்கு அண்மையில் அன்பளிப்புச் செய்துள்ளது.

இதேவேளை, இவ் இயந்திரத்தினைப் பயன்படுத்தி குப்பைகூழங்களை திறந்த வெளியில் எரிப்பதன் காரணமாக, இதனைச்சுற்றி இருக்கும் பொதுமக்களுக்கு வசதியீனங்கள் ஏற்படுத்தப்படுவதாகவும் அறியப்படுகின்றது.

(உ-77)

### மிருசுவில் சோதனைச் சாவடியில் கெடுபிடி

(திருநெல்வேலி)

குடாநாட்டிலிருந்து முகமாலை சோதனைச் சாவடி ஊடாக பயணம் செய்யும் பொதுமக்கள் மிருசுவிலிலுள்ள இராணுவச் சோதனைச் சாவடியில் மாலை 5 00மணியுடன் தடுத்துநிறுத்தப்படுகின்றனர்.

முகமாலைச் சோதனைச் சாவடி மாலை 6 00 மணி வரை திறந்திருக்கின்றபோதிலும் மிருசுவிலிலுள்ளபடையினர் பயணிகளை திருப்பி அனுப்பும்நடவடிக்கையில்ஈடுபட்டிருப்பதாகவும் கடந்த சில தினங்களில் 200 ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இவ்வாறு தடுத்துநிறுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

படையினரின் இந்த அத்துமீறிய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தக்கோரி மிருசுவில் பொது அமைப்புக்களினால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(த-43)

### சுற்றுலாப் பயணிகள் விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நேற்றுமுன் தினம் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், தென்பகுதி சுற்றுலாப் பயணிகளானஇருவர்படுகாயமடைந்துள்ளனர்.

சுமிந்தகுமார பிரியதர்சன் (வயது 20), கே. சுப்பையா (வயது 70) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(உ-6)

பாடசாலைகள் இயக்கமில்லை

### மாணவப் பருவத்தினர் கல்விக்கு முழுக்கு

(தென்மராட்சி)

மருதங்கேணியிலுள்ள 5 பாடசாலைகள் இயங்காமை காரணமாக அங்குள்ள மாணவர்கள் வேறு இடங்களிலுள்ள பாடசாலைகளில் அனுமதிபெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், அங்குள்ள பாடசாலைகள் இயங்காமையினால் போக்குவரத்துக் கஷ்டங்கள் காரணமாக சில மாணவர்கள் தமது கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்க நேரிட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

(உ-77)

### தேசிய இனங்களின்

லான அரசாங்கம், சமபலப் பிரதிநிதித்துவம் என்பனவே அவையாகும். எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட அனைவரதும் அபிலாஷைகளை இந்தியாவைப்போன்று ஒரு அரசமைப்புச்சபையூடாக சுதந்திரமாகக் கருத்துப்பரிமாறல்மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படாது பெரும்பான்மை இனத்தவரான சிங்கள மக்களிடம் அதிகாரம் கையளிக்கப்பட்டது. சிறுபான்மையினரின் பாதுகாப்புக்காகச் சோல்பரி அரசியல்திட்டத்தில் 29 வது சரத்து மட்டுமே இணைக்கப்பட்டது.

(தொடரும்)

### பத்திரிகைப் பேரவை

# கலைப்பு யோசனை விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(புத்தளம்)

ஊடகத்துறையின் சுதந்திரத்தையும், செயற்பாடுகளையும் மேலும் வலுப்படுத்தும் நோக்கில் பத்திரிகைப் பேரவையினை கலைக்கும் யோசனையை வெகுவிரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் கூறியுள்ளார்.

புத்தளம் மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு அரசாங்க தகவல் திணைக்களத்தினால் வழங்கப்படும் அடையாள அட்டைகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

புத்தள மாவட்டத்திலுள்ள 70 ஊடகவியலாளர்கள் கலந்து கொண்ட நிகழ்வில் அமைச்சர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் மேலும் பேசுகையில்;

இந்த நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டுமென்பதற்காக படித்தவர்கள் முதல் பாமர மக்கள் வரை முழு மனதுடன் ஆதரவு வழங்கி வரும் இந் நிலையில், ஜே.வி.பி உட்பட பொதுஜன ஐக்கிய முன்னணியின் சில எம்.பிக்கள் மட்டுமே எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க அளித்த வாக்குறுதிகளை நாம் நிறைவேற்றி வருகின்றோம் என்று அமைச்சர் கூறினார்

இவ் வைபவத்தில் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர், பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கபண்டாரா, அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் ஆரியரூபசிங்க உட்பட பலரும் உரையாற்றினார்.

(உ)

## காவலூர் பொலிஸ் நிலைய அதிகாரிகள் மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய அதிகாரிகள் மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டின் பேரில் விசாரணை செய்யப்படவுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளரும் விசாரணை அதிகாரியுமான ருவான் சந்திரசேகர இதனைத் தெரிவித்தார்.

கடந்த 17 ஆம் திகதி நாரந்தனைப் பகுதி கள்ளுத்தவறணையில் புகுந்து கடற்படையினர் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல் தொடர்பாக, பாதிக்கப்பட்டவர்களான தவறணையின் முகாமையாளர், சீவல்தொழிலாளர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யச் சென்ற வேளை, அதனைப் பதிவு செய்ய முடியாதென அங்கு நின்ற பொலிஸ் அதிகாரிகள் திருப்பியனுப்பியுள்ளனர்.

இதேவேளை, மேற்படி குழுவினர் தாக்குதல் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்ததுடன், பொலிஸ்நிலையத்தில் இடம்பெற்ற சம்பவம் குறித்தும் எடுத்துக்கூறினர்.

இதனையடுத்து, இணைப்பாளர் ருவான் சந்திரசேகர அவர்களைஅழைத்துச்சென்று சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்தார்.

இது குறித்தே சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டின் பேரில் விசாரணை செய்யப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

(உ-6)

### பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ்

## கைதான நால்வர் யாழ்.சிறைக்கு மாற்றம்

(உடுவில்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் களுத்துறை சிறையில தடுத்து வைக்கப்பட்டிருந்த 2 ஆண் கைதிகளும் வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு பெண் கைதிகளும் யாழ். சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த புதனன்று மாலை விமானம் மூலம் பலாலிக்கு கொண்டு வரப்பட்டு அங்கிருந்து யாழ்.சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.

மந்திகையைச் சேர்ந்த ச. சத்தியரூபன் (வயது24) மட்டக்களப்பைச் சேர்ந்த ம.குகதாசன் (வயது 27) வவுனியாவைச் சேர்ந்த த.கோமதி (வயது31) நல்லூரைச் சேர்ந்த அ.கலைச்செல்வி (வயது28) ஆகியோரின் வழக்கு விசாரணைகள் யாழ் உயர்நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டதையடுத்து யாழ்.சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டவர்களாவர்.

(உ-26)

## லயன் நிர்வாகிகள்

(தென்மராட்சி)

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தின் புதிய தலைவராக லயன் எம். தியாகராஜாவும் செயலாளராக லயன் சீ.கேசவராஜனும் பொருளாளராக லயன் ஆர்.சஜரூபனும் தெரிவாகியுள்ளனர்.

● ● ●

கொக்குவில் லயன்ஸ்கழகத்தின் புதிய தலைவராக லயன் பி.சந்திரநாதனும் செயலாளராக லயன் கே.எம்.பத்மநாதனும் பொருளாளராக லயன் ஆர். இந்திரலிங்கமும் தெரிவாகியுள்ளனர்.

● ● ●

இணுவில் லயன்ஸ் கழகத்தின் புதிய தலைவராக லயன் டாக்டர் ரீ. அமிர்தலிங்கமும் செயலாளராக லயன் ஏ ஸ்ரீகாந்தனும், பொருளாளராக லயன் ரீ.புரந்திரதாசனும் அண்மையில் தெரிவு செய்யப்பட்டனர்.

● ● ●

நல்லூர் லயன்ஸ்கழகத்தின் புதிய தலைவராக லயன் வீ. எஸ். சொக்கலிங்கமும், செயலாளராக லயன் எஸ். கோபாலசிங்கமும் பொருளாளராக லயன் எம்.கணேசராஜாவும் தெரிவாகியுள்ளனர். (உ-77)

## நெடுந்தீவில் தலைமைத்துவ விருத்தி பயிற்சி நெறி

(நெடுந்தீவு)

க.பொ.த. சாதாரண தரமும் அதற்கு மேலும் கல்வி கற்றுவிட்டு வேலைவாய்ப்பின்றி இருக்கும் 18 வயதுக்கும் 28 வயதிற்கும் உட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான தலைமைத்துவம், தொழில் திறன் இரண்டையும் விருத்தி செய்யும் நோக்குடன் 25 வார காலப் பயிற்சி நெறி ஒன்றினை நீர்ப்பாசனம் நீர் முகாமைத்துவ அமைச்சு மேற்கொள்ளவுள்ளது.

பயிற்சி காலத்தின் போது ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ஊக்குவிப்புத் தொகையாக 2 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

இதற்கு தகுதியான இளைஞர், யுவதிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் நெடுந்தீவு, அரசாங்க அதிபர் பிரிவு கோரியுள்ளது.

விண்ணப்ப படிவங்களை 28.08.2002 ஆம் திகதிமுதல் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நேரடியாக வந்து பெற்றுஉடன் பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(உ-250)

## பிரிட்டனில் வருடாந்தம் ஆயிரத்து 500 பேர் அகதி அந்தஸ்து கோருகின்றனர்

(கொழும்பு)

பிரிட்டனில் அகதி அந்தஸ்துக் கோருவோர் தொகை தினம் தினம் அதிகரித்து வருகிறது.

இந்த வகையில் வாரத்தில் ஆயிரத்து 500 பேர் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பிப்பதாகவும்,

இவ்வாறு விண்ணப்பிப்பவர்களில் இலங்கை, ஈராக், ஆப்கானிஸ்தான், சோமாலியா, துருக்கி ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களேபெருமளவாகஇருப்பதாகவும்பிரிட்டன் அமைப்பு ஒன்றுதெரிவித்துள்ளது.

வருடாந்தம் 70 ஆயிரம் பேர் அகதி அந்தஸ்துக் கோரிவிண்ணப்பிப்பதாகவும், இவர்களில்10 வீதத்தினர்க்கே வதிவிடவிசா வழங்கப்படுவதாகவும் அவ் அமைப்பு தெரிவித்துள்ளது. (உ)

## மீசாலை காயத்திரி காமகோடி பீடாதிபதி வன்னி பயணம்

(யாழ்ப்பாணம்)

மீசாலை ஸ்ரீ காயத்திரிகாமகோடி பீடாதிபதி சுவாமி ஸ்ரீ ராஜ்குமார், கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தின் சுவாமி கணேசானந்தாவின் அழைப்பையேற்று எதிர்வரும் திங்களன்று வன்னிசெல்லவுள்ளார்.

வன்னி செல்லும் சுவாமிகள் அங்கு நலன்புரி நிலையங்கள், வைத்தியசாலைகள், ஆலயங்கள் என்பவற்றைப் பார்வையிடவுள்ளார். (உ)

## குடாநாட்டில் புகையிரத ஆணைச்சீட்டு விண்ணப்பம் இல்லை

(சுதுமலை)

யாழ்.குடாநாட்டில் உள்ள அரசாங்க அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் புகையிரத ஆணைச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் படிவங்களுக்கு தட்டுப்பாடுநிலவுகின்றது.

கடந்த 12 வருடங்களிற்கு மேலாக யாழ் குடாநாட்டுக்கென ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டதை அடுத்து அரசாங்க ஊழியர்கள் பலர் தமது இலவச புகையிரத ஆணைச்சீட்டுகளை பயன்படுத்தவில்லை.

இதேவேளையில், தற்போது யாழ்-கண்டிவீதிதிறக்கப்பட்டதை அடுத்து அனேகமான உத்தியோகத்தர்கள் தமது இலவச புகையிரத ஆணைச்சீட்டுகளை பெற்று கொண்டு தென்பகுதிக்கு செல்வதற்குஆணைக்சீட்டுக்கு அலைய வேண்டியுள்ளதுடன்

படிவம் இல்லாத காரணத்தால் சில உத்தியோகத்தர்கள் தாமே படிவம் தயாரித்து விண்ணப்பம் செய்வதும் குறிப்பிடத்தக்கது.

(உ-252)

## புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும்

### அ.இ.த.கா. திருமலைக் கிளை தீர்மானம்

(திருகோணமலை)

விடுதலைப் புலிகள் மீதான தடை உடன் நீக்கப்படவேண்டும் என்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் திருகோணமலை மாவட்ட கிளையின் மாதாந்த கூட்டத்தின் போது தீர்மானம் நிறை வேற்றப்பட்டுளது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளையின் தலைவர் சுதா சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில்,

புரிந்துணர்வுஒப்பந்தம்கைச்சாத்திடப்பட்டு7மாதங்களாகியும் இன்னும் விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டதுடன்,

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறும் வகையில் அங்குள்ள கண்ணி வெடிகள் மற்றும் மிதி வெடிகளையும் அகற்றும்படி சம்பந்தப்பட்ட தரப்புக்களைக் கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (உ-10)

## கோழிகளுக்கு தூக்க நோய்

(கல்வயல்)

யாழ் குடாநாட்டில்கோழிகளுக்குத் தூக்கநோய் வலுவேகமாகப் பரவி வருகிறது;

தற்போதைய அதிகரித்த வெப்பம் காரணமாக பரவும் இத் தூக்கநோய்க்கு, தடுப்பு மருந்து கொடுக்கப்பட்ட கோழிகளும் பலியாகி வருவதாகக் கூறப்படுகிறது.

(உ-111)

## மட்டக்களப்பு சிறையில் இருகுழுக்களிடையேமோதல்

(புத்தளம்)

மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கும், ஏனைய கைதிகளில் ஒரு குழுவினருக்குமிடையில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் கைதியொருவர் படுகாயமடைந்துள்ளார்.

கடந்த செவ்வாயன்று மாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் குறிப்பிட்ட கைதிகள்குழு விடுதலைப்புலிகளுக்கு எதிரான தமிழ் அமைப்புகளுடன் தொடர்புடையவர்கள்என தெரிவிக்கப்படுகின்றது.

ஆரையம்பதியில் விடுதலைப்புலி உறுப்பினர் மற்றும் ஆதரவாளர் தாக்கப்பட்டசம்பவம் தொடர்பாக 'வரதன் குழு' உறுப்பினர் 3 பேர் அங்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மறியல்கைதிகளில் ஒருவர் தமிழ் அரசியல்கைதிகள் சிலரால் தாக்கப்பட்ட சம்பவத்தையடுத்து இந்த கோஷ்டிமோதல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது:

(உ)

### கமக்காரர்களுக்கு

## துப்பாக்கிகள்

(கொழும்பு)

விவசாயிகள் துப்பாக்கிகளை பெற்றுக்கொள்ள கடன்வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், தகுதியான துப்பாக்கி ரகங்களைபெற்றுக் கொடுக்கவும் விவசாய அமைச்சு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

விவசாய உற்பத்திகளுக்கு விலங்குகளால் ஏற்படும் சேதங்கள் தொடர்பாக அடிக்கடி சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ)

## சங்கே முழங்கு

### நிறுவனங்கள் கொடுத்த பொருட்களில் பாரபட்சமா!

சாவகச்சேரியின் மட்டுவில் வடக்கு, மட்டுவில் கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் கடந்த வாரம் வழங்கப்பட்ட சமையல் உபகரணங்கள், பாய்கள், வாளிகள், லாம்புகள் போன்ற பொருட்கள் விநியோகத்தில் பாரபட்சமான முறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு திட்டமிடலுமின்றி வேண்டியவர்களுக்கு மட்டும் தாராளமாக இப்பொருட்கள் விநியோகிக்கப்பட்டன; ஏனைய சிலருக்கு கண்துடைப்பிற்காக ஒரு சில பொருட்கள் மட்டும் வழங்கப்பட்டன. அத்துடன் உண்மையிலேயே மீளக்குடியேறியுள்ள மிக வறுமையானவர்களிற்கும் இப்பொருட்கள் கிடைக்கவில்லை. மாறாக மீளக்குடியமராத பலருக்கு இவை வழங்கப்பட்டுள்ளன. எனவே அதிகாரிகள் இதில் கவனம் எடுப்பார்களா?

ஆ. ஞானேஸ்வரன்

# இன்று ஒரு தகவல்

## மனிதனும் பொம்மையும்

இந்த உலகத்தில் எப்படி வாழ்வது என்று தெரியவில்லை சார்; உங்களுக்குஏதாவது வழி தெரிந்தால சொல்லுங்கள என்று மிகவுப்சுலபமாக கேட்டுவிட்டார்ஒருவர். வழி சொல்லுங்கள் என்று கேட்கிறாரே...இது என்ன வடக்கே போ...தெற்கே போ என்று சொல்கிற சமாச்சாரமா? நான் யோசித்தேன். சரி; என்னோடு வாருங்கள் என்று சொல்லி அவரை ஒரு சர்ச்சுக்கு கூட்டிக் கொண்டு போனேன். அங்கே ஒரு குருவானவர் ஜனங்களுக்கு நல்ல வழிகளைச் சொல்லிக்கொண்டிருந்தார். அவர் சொன்னஒரு சின்னக்கதையில் இவர் என்னிடம் கேட்ட கேள்விக்கான பதில் இருந்தது.

இதுதான் சார்...உங்கள் கேள்விக்கு விளக்கம்... என்னை விட்டு விடுங்கள் என்று சொல்லி அவரிடமிருந்து தப்பிக்கொண்டேன். இந்த உலகத்திலே எப்படி வாழ்வது? என்கின்ற கேள்விக்கு எங்களுக்கு அங்கே கிடைத்த விளக்கத்தை இப்போதுஉங்களிடமும் சொல்லுகிறேன்.

ஒரூரில் ஒருபெரியவர் இருந்தாராம் அவர்மக்களுக்குநல்ல வழிகளைச்சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாராம். எல்லோரையும் கூப்பிட்டு ஓரிடத்தில் உட்கார வைத்து சில செயல் விளக்கமெல்லாம் செய்து காட்டுவாராம். ஒரு நாள் அப்படித்தான் ஒரு கூட்டத்தில் அவர் பேசிக் கொண்டிருக்கிறார். அவருக்குஎதிரில் மேசை மேல் மூன்று கண்ணாடிப் பாத்திரங்களில் சுத்தமான தண்ணீர்மிகவும்தெளிவாக இருக்கின்றது. அதே மேசையில் இன்னொரு பக்கத்தில் மூன்று மனித பொம்மைகள் மூன்றும் மனித உருவம் தான்...இருந்தாலும் அதில் ஒரு வித்தியாசம். ஒரு பொம்மை களிமண்ணால் செய்யப்பட்டது ஒருபொம்மை பஞ்சிலே செய்யப்பட்டது. இன்னொன்று சர்க்கரையினாலானது.

உருவம் ஒரேமாதிரி தான் இருந்தாலும் அவற்றின் உளளே இருப்பது வேறு. இப்போது அந்தப் பெரியவர் என்ன பண்ணினார்...முதலில் களிமண் பொம்மையைக் கையில் எடுத்தார் ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில்அதைப் போட்டார். பின்னர் பஞ்சுப் பொம்மையை எடுத்து மற்றப் பாத்திரத்தில் போட்டார் அதன்பின் சர்க்கரைப் பொம்மையை எடுத்து இன்னொரு பாத்திரத்தில் போட்டார். ஆகவே, மூன்று பொம்மைகளையும்மூன்றுபாத்திரங்களிலுள்ளதெளிவான தண்ணீரில் போட்டுவிட்டார். எதிரில் உட்கார்ந்திருந்த சனங்களைப் பார்த்து 'இப்போது இதை எல்லோரும் கவனியுங்கள் என்றார். கவனித்தார்கள்,' இப்போது என்ன நடக்கிறது என்று கேட்டார். களிமண் பொம்மையைப் போட்டார் அல்லவா? அந்தப் பொம்மை தண்ணீரில் கரைந்து-தண்ணீர் முழுவதும் கலங்கலாக-சேறாக ஆகிவிட்டது.

பஞ்சுப் பொம்மையைப் போட்டாரே... அந்தப் பொம்மை பாத்திரத்திலுள்ள தண்ணீர் முழுவதையும் தனக்குள்ளே உறிஞ்சி இழுத்துக் கொண்டது. சர்க்கரைப் பொம்மையைப் போட்டரே.. அங்கே என்ன நடந்ததென்றால், பொம்மை தண்ணீரில் கரைந்து தண்ணீரோடு தண்ணீராகிவிட்டது. இந்த மூன்று பாத்திரங்களையும் சனங்களிடம் காட்டி அந்தப் பெரியவர் விளக்கம் கொடுத்தார்.

இப்பொழுது மூன்று பொம்மைகளைப் பார்த்தீர்கள். இந்த மூன்றும் மூன்றுவகை மனிதர்களுக்கு உதாரணம். களிமண் பொம்மை மாதிரி உள்ளவர்கள் இந்த சமூகம் என்கிற தண்ணீரில் கலக்கும் பொழுது ... அவர்களும் கரைந்து விடுகிறார்கள். சமூகத்தையும் கலக்கிச் சேறாக்கி விடுகிறார்கள். பஞ்சு பொம்மை மாதிரியுள்ளவர்கள் சுயநலவாதிகள். சுற்றியிள்ளவற்றையெல்லாம் தமக்கு உபயோகப்பட வேண்டும் என்று நினைத்து உறிஞ்சிக் கொள்கிறவர்கள். சர்க்கரைப்பொம்மை மாதிரி உள்ள மனிதர்கள், சமூகத்துக்காகத் தம்மையே கரைத்துக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறவர்கள்...இவர்களால் சமூகம் முழுவதும் இனிமை பெறுகிறது.

ஆகவே, இந்த உலகத்திலே எப்படிவாழவேண்டும் என்று கேட்டால், சர்க்கரைப் பொம்மை போன்று வாழ வேண்டும். அதுதான் அந்தப் பெரியவர் நமக்குச் சொல்கிற விளக்கம். இப்படி நானும் ஒரு செயல் விளக்கம் பண்ணினேன். ஒருநாள் விடியற் காலையில்...ஒரு நண்பர் வீட்டுக்குப் போனேன். உலாவப் போகின்ற வழியில் அவருடை வீடு, அதனால் அவ்வப் பொழுது போவது வழக்கம். அப்பொழுது அவர் காப்பி சாப்பிட்டுக் கொண்டிருந்தார், என்னைப்பார்த்ததும் எனக்கும் ஒரு காப்பி வழக்கம் போல வந்தது

பக்கத்திலே சர்க்கரை தனியாக வைத்திருந்தார்கள். நான் ஒரு கரண்டி சர்க்கரையை எடுத்துக் காப்பியில் போட்டுக் கலக்கினேன். சர்க்கரை கரைந்துவிட்டது. உடனே பேச ஆரம்பித்து விட்டேன். 'பாருங்கள் சார்! ஒரு கரண்டி சர்க்கரைதான்-இருந்தாலும் அது ஒரு டம்ளர் காப்பியிலே தன்னைக் கரைத்து, தியாகம் பண்ணிக் கொண்டது. காப்பி முழுவதையும் இனிப்பாகவும் ஆக்கிவிட்டது. இதிலிருந்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?' என்று கேட்டேன். அவர் நிமிர்ந்து என்னைப் பார்த்தார். 'இனிமேல் நீங்கள் எங்கள் வீட்டுக்கு வந்து சேர்வதற்குள் காப்பியைச் சாப்பிட்டு முடித்துவிடவேண்டும் என்று நினைக்கிறேன்' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சமாதான முன்னெடுப்பை ஊக்குவிக்க பேரவை

சமாதான முன்னெடுப்புக்களை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் வகையில் அகில இலங்கை பொது ஊழியர் முன்னணி சமாதானப் பேரவையை அமைக்கவுள்ளது.

மூவின மக்களையும் உள்ளடக்கிய இப்பேரவையில் கல்விமான்கள் பலர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இது தொடர்பான கூட்டம் விரைவில் நடைபெறவுள்ளதாக முன்னணியின் பொதுச் செயலாளர் கே. நடராஜா தெரிவித்துள்ளார். (உ)

# நிரந்தர சமாதானம் ஏற்பட்டால் யாழ்ப்பாணத்தை புனரமைக்க பிரிட்டிஷ் அரசாங்கம் உதவும்

(தென்மராட்சி)

இலங்கை அரசாங்கத்திற்கும்- தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றி பெறவேண்டும் என பிரிட்டன் விரும்புகின்றது. இலங்கையில் நிரந்தர சமாதானச் சூழ்நிலை ஏற்பட்டதும் பிரிட்டன் உட்பட பல சர்வதேச நாடுகள் யாழ்ப்பாணத்தின் புனரமைப்புக்கும் அபிவிருத்திக்கு உதவத் தயாராக உள்ளன.

இவ்வாறுநேற்றுமுன்தினம் பிற்பகல் 5 மணிக்கு யாழ் அரச செயலகத்துக்கு விஜயம் செய்திருந்த பிரிட்டிஷ் பாராளுமன்றத் தூதுக்குழுவின் தலைவரான ஹெவின் பரோன் எம்.பி குறிப்பிட்டார்.

யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல்தலைமையில்அரச அதிபர்செயலகத்தில்நடைபெற்ற சந்திப்பில் மாவட்ட பிரதேச செயலர்கள் மற்றும் அரச அதிகாரிகளும் பங்குகொண்டிருந்தனர்.

பாராளுமன்றத் தூதுக்குழுவின் தலைவரான ஹெவின பரோன் எம்.பி அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

முப்பது வருட காலத்தின் பின்னர் முதல்முறையாக இப்போதுதான் ஒரு பாராளுமன்றத் தூதுக்குழு யாழ்ப்பாணம் வந்துள்ளது இது ஒரு நல்ல அடையாளமாகும். எம்மைப்போல பல பாராளுமன்றத் தூதுக்குழுக்கள்இங்கு எதிர்காலத்தில் வருகைதரும்.

கடந்த 25 வருடகாலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக அழிக்கப்பட்ட வீடுகள், கட்டடங்கள் யாவற்றையும் பார்வையிட்டோம். இவற்றையும் மீளவும் கட்டியெழுப்ப நாம் சில முயற்சிகளை மேற்கொள்வோம் என்றார்.

பிரிட்டனில் தஞ்சமடைந்திருக்கும் தமிழ் இளைஞர்கள் திருப்பி அனுப்பப்படுவார்களா? எனப் பத்திரிகையாளர் கேட்டபோது இங்கு சமாதான சகவாழ்வு நிலவ ஆரம்பித்ததும் அவர்கள் இங்கு வந்து நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபடுவது நல்லது என்று அவர் கூறினார்.

மேலும் இச் சந்திப்பின் போது யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழ்கின்ற மக்கள் எதிர்நோக்கும் விவசாயம், வீடு, தொழில் புனரமைப்பு, புனர்வாழ்வுப் பிரச்சினைகள் பற்றி பிரதேச செயலர்கள் விரிவாக எடுத்துக் கூறியிருந்தனர்.

பிரிட்டிஷ் பாராளுமன்றத் தூதுக்குழுவின் யாழ் விஜயத்தின் நினைவாக தூதுக்குழுவின் தலைவர் மேலதிக அரச அதிபரிடம் ஒரு நினைவுச் சின்னத்தை அன்பளிப்பாக வழங்கினார்.

இத் தூதுக்குழுவில் மொத்தம் 9 பிரிட்டிஷ் குழு உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தனர். (இ-77)

## தெய்வீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தில் வடபிரதேச இந்துப் பேரவை 63 நாயன்மார்குருபூசைமடத்தில் நடத்திவரும் தெய்வீக நிகழ்ச்சிகளில் இன்று 'சித்தர்களின் சமயம்' என்ற பொருளில் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்சொற்பொழிவாற்றவுள்ளார். (உ-3)

## தெய்வீக இசையரங்கில் இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர்மன்றம்நடத்தும நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டிய தெய்வீக இசையரங்கில், பன்னிரண்டாம் நாளான இன்று பி. ரஜீவன் குழுவினரின நாதஸ்வரக கச்சேரி இடம் பெறவுள்ளது. (உ-3)

## இன்னிசைப் பேருரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தையொட்டி நல்லூர் சைவமகாசபை ஏற்பாட்டில் ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ. சிவ. வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்திவரும் மகாபாரத இசைப் பேருரை இன்று 'பாண்டவர் ஜனனம்' என்ற பொருளில் இடம் பெறவுள்ளது. (உ-3)

## மரத்தளபாடங்களுக்கு மவுசு

(அராலி)

தென்னிலங்கையில் இருந்து வரும் வர்த்தகர்கள் குடாநாட்டில் பழைய மரத்தளபாடங்களை போட்டிபோட்டு வாங்கி வருகின்றனர்.

பழைய பூவேலை செய்யப்பட்ட கதவுகள், யன்னல்கள், நிலைகள் மற்றும் பெட்டகங்கள், அலுமாரி, கட்டில்கள் என்பவறறை கிராமம் கிராமமாகச் சென்று கொள்வனவு செய்து சேகரித்து வாகனமூலம் கொழும்பு கொண்டு செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (உ-214)

## புத்தளத்தில் ஆயுதம்மீட்பு

(புத்தளம்)

புத்தளம் ஆனமடுவப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து 2 துப்பாக்கிகள், 5கைக்குண்டுகள், துப்பாக்கிக்குரிய 35 ரவைகளை புத்தளம் பொலிஸார் நேற்று முன்தினம்மீட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடமேல் மாகாண பிரதிப் பொலிஸ்மாதிபர் தெரிவித்துள்ளார். (த)

## மாமியார் தாக்கி இராணுவ வீரனான மருமகன் மரணம்

(கொழும்பு)

மாமியார் தாக்கியதில் படை வீரரான மருமகன் மரணமானார்.

கடந்த திங்களன்று இரவு நம்புக்கணைப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புத்திக ஜெயம்பதி (வயது 30) என்ற படைவீரர் லீவில் வீட்டில்நின்றவேளை, மாமியாருடன் தகராறு ஏற்பட்டதாகவும் இதனால் ஆத்திரமுற்ற மாமியார் மருமகனை செங்கல்லினால் தலையில் தாக்கியதில் மரணமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## சமாதான ஒன்றிணைப்பு குழுக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மலையகப் பேரவை நடத்தும் தேசியமட்ட சமாதான ஒன்றிணைப்புக்குழுக் கலந்துரையாடல் நேற்றுமுதல் ஆரம்பமாகி எதிர்வரும்26-ம் திகதி திங்கட்கிழமை வரையான 4 தினங்கள் நுவரெலியாவில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பங்கேற்க யாழ். மாவட்டத்தில் இருந்து கியூடெக் சமாதான குழுவைச்சேர்ந்த இ. யூஜின், ஆ. பெனிடஸ், சி. தர்ஷன், சி. மதனரூபன் ஆகியோர் நுவரெலியா சென்றுள்ளனர் சமாதானத்தின் தேவை பற்றியும், அதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும் இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-6)

## அனலைதீவு- எழுவைதீவு பயணிகள் சிரமம்

(ஊர்காவற்றுறை)

அனலைதீவுக்கும், எழுவை தீவுக்கும் இடையில் நேரடியானபயணிகள்படகுச்சேவை இடம்பெறுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அனலைதீவில் வசிக்கும் ஒருவர்எழுவைதீவிற்குச் செல்ல வேண்டுமாயின் அனலைதீவில் இருந்து காலை புறப்பட்டு ஊர்காவற்றுறைக் கண்ணகி அம்மன் கோவில் துறைமுகத்திற்குச் சென்றுபின்பிற்பகல்3மணிக்கு ஊர்காவற்றுறையில் இருந்து எழுவை தீவுக்குச் செல்லும் படகினிலேயே செல்ல வேண்டும்.

இதேபோல் எழுவை தீவில் வசிப்பவர் அனலை தீவுக்குச் செல்ல வேண்டுமாயின்காலை ஊர்காவற்றுறைக்குச் சென்று பிற்பகல் 2 மணிக்கு அனலை தீவு செல்லும் படகினிலேயே செல்ல வேண்டும்.

இதனால்மறுநாள்காலையே சொந்த இடம் திரும்ப வேண்டிய நிலை இருப்பதாகவும், குறிப்பிட்ட தீவுகளுக்குச் செல்வதாயின்2 நாட்களைசெலவிட வேண்டியிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேற்படி தீவுகளில் இருந்து தனியார் படகுகளே சேவையில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. உ-7

## மரங்கள் நாட்டல்

வடமராட்சி கிழக்குப்பகுதியிலுள்ள கரையோரப்பகுதிகளில் சுமார் 30 ஏக்கரில் கஜூரினா மரங்களை நாட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

முன்பு இப்பகுதியில் நடுகை செய்யப்பட்ட கஜூரினா மரங்கள் விறகுத்தேவைக்காக களவாக வெட்டப்பட்டனஎனத் தெரியவருகின்றது. (உ-77)

# 7 ஆயிரம் மாலாவிச் சிறுவர்கள் பஞ்சத்தால் மரணத்தின் விளிம்பில்

(லண்டன்)

போசாக்கின்மை காரணமாக 7ஆயிரம் மாலாவிச்சிறுவர்கள் மரணத்தின் விளிம்பிற்கு தள்ளப்பட்டுள்ளதாக அந்நாட்டின் தேசிய போசாக்கு இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

மாலாவியில் 65 ஆயிரம் போசாக்கற்ற குழந்தைகள் உள்ளார்கள் என்றும் 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட தாய்மார்களுக்கு அவசரபோசாக்கு உதவி தேவைப்படுகிறது எனவும் ஐக்கியநாடுகள் சபையின் சிறுவர்நிதியத் தலைவர் கரோல் பெலாமினிடம் தெரிவித்துள்ளார்.

இங்கு 5 இலட்சத்திற்கு கூடுதலான மாணவர்கள் வறுமை காரணமாக பாடசாலைக்குச் செல்வதை நிறுத்திவிட்டார்கள் எனவும் அந்நாடு அறிவித்துள்ளது.

மாலாவியில் தற்போது நிலவும் பஞ்சத்தை ஒழிக்க 6 இலட்சம் டொலருக்கான உணவு உதவி தேவைப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

# உலக தரிசனம்

## ரஷ்ய இராணுவக் ஹெலி விபத்து; விமானப்படைத்தளபதி இடை நிறுத்தம்

(மொஸ்கோ)

ரஷ்ய இராணுவக் ஹெலி விபத்துக்கு உள்ளாகிய சம்பவம் தொடர்பாக ரஷ்ய இராணுவவிமானப்படைத் தளபதி ஜெனரல் விற்றாலிபாம்லோ பதவியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பான விசாரணைகள் முடிவுக்கு வரும் வரை, விமானத்தளபதி பதவியிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக இவ் விசாரணைகளுக்கு தலைமை தாங்கி செச்சினிய சென்றுள்ளரஷ்யப்பாதுகாப்பு அமைச்சர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, இக்ஹெலிகொப்டர் செச்சினிய கிளர்ச்சியாளர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது என வெளியான தகவலை அடுத்து நேரில் பார்வையிடுவதற்காகவேரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் தலைமையிலான குழுவொன்று அங்கு சென்றுள்ளதாக ரஷ்ய பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படிவிபத்தில் பலியான ரஷ்யப் படையினரின் எண்ணிக்கை114 ஆக உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## சார்க் உச்சிமாநாடு பாகிஸ்தானில் நடைபெறச் சாத்தியமில்லை

### இந்தியத் தரப்பு கருத்து

(புதுடில்லி)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும்இடையேயானபதற்ற நிலை தொடர்ந்தும் நீடித்தால் அடுத்த வருடம்பாகிஸ்தானில் நடைபெறவுள்ள சார்க் உச்சிமாநாட்டிற்கு இடையூறு ஏற்படக் கூடும் என்று இந்தியா கருத்து தெரிவித்துள்ளது

அரசியல் நிலை அங்கு சீரடைந்தால் திட்டமிட்டபடி அடுத்த வருடம் சார்க் உச்சிமாநாட்டை நடத்த முடியும்;

அவ்வாறன்றி தற்போது இருந்து வரும் பதற்ற நிலை தொடர்ந்தால் உச்சிமாநாட்டை நடத்துவதில் சிக்கல் நிலை ஏற்படும் என இந்தியவெளிவிவகாரசெயலாளர் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ், பூட்டான் மாலைதீவு, இந்தியா, நேபாளம் இலங்கை பாகிஸ்தான் ஆகிய7 நாடுகள் அங்கம்வகிக்கும் சார்க் அமைப்பின் உச்சிமாநாடு பாகிஸ்தானின்தலைநகர்இஸ்லமபாத்தில் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## பாகிஸ்தான் பொதுத் தேர்தலில் நவாஸ் ஷெரீப் போட்டியிடுவார்

(இஸ்லாமபாத்)

பதவி கவிழ்க்கப்பட்ட பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி நவாஸ் ஷெரீப்பும் அவரது குடும்பத்தினரும் எதிர் வரும் ஒக்டோபர் மாதம் அங்கு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் துணைத்தலைவி டெஸ்மி டார்ரனாலாகூரில் வைத்து ஊடகவியலாளர்களிடம் இத்தகவலை வெளியிட்டார்.

பாகிஸ்தானின் பொதுத் தேர்தலுக்கான மனுத்தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் இன்று சனிக்கிழமை என பாகிஸ்தானின் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் வெளிநாடொன்றில் தஞ்சமடைந்துள்ள பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி நவாஸ் ஷெரீப் அவரது மனைவி மற்றும் சகோதரர் ஆகியோர் எவ்வாறு தமது வேட்புமனுத்தாக்கலை செய்வார்கள் என்பதை டெஸ்மினா ஊடகவியலர்கள்ாள மத்தியில் கூற மறுத்து விட்டார்.

கட்சியின் தலைமையை தனது சகோதரரிடம் ஒப்படைத்து விட்டு கேர்தலில் போட்டியிடுவதிலிருந்து நவாஸ் ஷெரீப்விலகிக்கொள்ளப்போவதாக முன்னர் செய்திகள் பலவும் வெளியாகி இருந்தன.

நவாஸ்ஷெரீப் மீதும் அவரது சகோதரர்கள் மீதும் பாகிஸ்தானிய அரசாங்கம் ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## ஜெருசலேமின் சில பகுதிகளை பலஸ்தீனர் வசம் ஒப்படைக்குக

### முன்னாள் நகர முதல்வர் கோரிக்கை

(ஜெருசலேம்)

ஜெருசலேத்தின் சில பகுதிகளை பலஸ்தீனர்களின் நிர்வாகத்தின் கீழ் ஒப்படைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஜெருசலேத்தின் நகர முதல்வராக இருந்த செரி கொலக்ஸ் நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கையிலேயே இந்தக் கோரிகையை விடுத்துள்ளார்.

கிழக்கு ஜெருசலேமியர் நான்கு பேரை தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் இஸ்ரேலியர்கள் கைது செய்துள்ளனர் என அறிவித்த 24 மணி நேரத்திலேயே இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (உ-8)

## பழைமையான பொருட்களை பாதுகாப்பதற்கு வியட்நாம் திட்டம்

(லண்டன்)

வியட்நாமின் தெற்குக் கடற்பகுதியில் 44 மீற்றர் ஆழத்தில் புதைந்துகிடந்த கப்பலில் காணப்படும் பழமைமிக்கபொருட்களைப் பாதுகாக்கும் திட்டம் ஒன்றை அந்த நாடு செயல்படுத்தவுள்ளது:

இக்கப்பலில் 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொருட்கள் இருக்கலாம் என வியட்நாம் அதிகாரிகள் நம்புகின்றனர்.

கப்பலைக் கண்டுபிடித்த மீனவர்கள் அதிலிருந்து பல பொருட்களை அகற்றிச் சென்றுள்ளதையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளன. (உ-3)

## இந்திய-பாகிஸ்தான் பதற்றம் தணியவில்லை

### இந்தியதுணைப் பிரதமர்

(புதுடில்லி)

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையிலே தொடர்ந்தும் யுத்த சூழ்நிலை காணப்படுவதாக இந்தியாவின் துணைப்பிரதமர் எல். கே. அத்வானி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையிலுள்ள முறுகல் நிலையினை தடுப்பதற்கு சர்வதேச நாடுகள் தயாராகி வருகின்றமையும்,

இதன் முதற்கட்டமாக அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் இந்தியாவிற்கு விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-10)

## விடுதலைப் புலிகளுக்கு ஆமிடேஜ் கடிதம்

(லண்டன்)

யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஆமிடேஜ் விடுதலைப்புலிகளின் முகவரியிட்டு கடிதம்ஒன்றைஅனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையில் புலிகள் முரணான கருத்துக்களை முன்வைக்காது 1972 ஆம் ஆண்டு முதல்நடைபெற்றுவரும் இனமோதலுக்கு முடிவுகட்ட வேண்டும் எனவும்,

அதேவேளை, அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில்நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தையை தாம் வரவேற்பதாகவும் ஆமிடேஜ் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. த)

## ஈராக்மீதுதாக்குதல் குறித்து அமெ. பிரமுகர் முரண்பாடு

(வாஷிங்டன்)

ஈராக்மீதுஅமெரிக்காநடத்தவுள்ளதாக கருதப்படும் இராணுவத் தாக்குதல்கள் குறித்து அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்க அமைச்சர்களமத்தியில் மாறுபட்டகருத்துக்கள் நிலவி வருகின்றன.

ஈராக் மீதுஇராணுவத்தாக்குதல் நடத்துவதற்கு ஏற்ற காலச் சூழ்நிலை இதுவல்லஎன குடியரசுக்கட்சியின்முன்னாள் இராஜாங்க அமைச்சர் லோறன்ஸ்ஈகிள்பேஹஸ் தெரிவித்துள்ளார்.

15 வருடங்களாக இராஜாங்க அமைச்சு பதவியில் இருந்த மெதலின்ஆம்ஸ்ரைக் கருத்துக் கூறுகையில் அமெரிக்காவுக்கு ஈராக் நேரடி அச்சுறுத்தல் எதனையும் விடுக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஈராக் பேரழிவுகளை ஏற்படுத்தக் கூடிய ஆயுத உற்பத்தி செய்து வருகின்றது என்பதற்கான காரணம்கிடைத்தால்அன்றி ஈராக்கின் ஜனாதிபதி சதாம் ஹுசைனை பதவி கவிழ்க்க அமெரிக்கா எடுக்கும் நடவடிக்கைக்கு உதவப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் ஈராக் மீதான தாக்குதலை அமெரிக்கா பிற்போடுமாயின், அது பல நன்மைகளுக்கு வழிவகுக்கும் எனவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (உ-8)

## டொங்டாங் ஏரி உடைப்பெடுக்கும் அபாயம்

(பீஜிங்)

சீனாவின் மிகப் பெரிய ஏரிகளில் ஒன்றான ஆயிரம் சதுர மைல் நிலப்பரப்பைஉள்ளடக்கிய டொங்டாங் ஏரி உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சீனாவில்ஒரு வாரகாலமாக தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாகவே இவ் ஏரி உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஏரியைச்சுற்றி வாழ்ந்துவந்த சுமார் 6இலட்சம்மக்கள் பாதுகாப்பு கருதி அவ்விடங்களை விட்டு வெளியேறி வருகின்றனர்.

ஆனாலும் இதன் உடைப்பை தடுக்கும் முன் முயற்சிகளில் சுமார் 9இலட்சம் மக்கள் தங்களது உயிர்களை பணயம் வைத்துசெயற்பட்டுவருகின்றனர் என சீன அரசு தெரிவித்துள்ளது. (உ-8)

## பட்ட கடனை அடைக்க பாகிஸ்தானுக்கு 3 மில்லியன் நிதியுதவி

உதவித்திட்டத்தின் அடிப்படையில் பாகிஸ்தானுக்கு 3 மில்லியன் டொலர்களை வழங்க அமெரிக்கா இணக்கம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க உதவி நிதியம், அமெரிக்க வங்கி மற்றும் பாதுகாப்பு திட்டத் திணைக்களம் ஆகியவற்றிடம் இருந்து பெற்ற கடனை திருப்பிச் செலுத்துவதற்காகவே பாகிஸ்தானுக்கு இந்நிதி வழங்கப்படவுள்ளது;

இதற்கான ஒப்பந்தம் ஒன்று பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நேற்றுக் காலை கைச்சாத்திடப்பட்டது. (உ-8)

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை தான்சாந் துயரம் தரும்

குறள்

வலம்புரி

## மறைமுக ஆக்கிரமிப்பு

நாட்டில்சமாதானத்தை ஏற்படுத்துவோம் எனக் கூறும் ஆளும் ஐக்கிய தேசியமுன்னணிக்குப் பின்னால் அமெரிக்கா இருப்பது தற்போது தெளிவாகிறது.

தமிழீழவிடுதலைப்போராட்டம் எதற்காக ஏற்பட்டது, இலங்கையில் சிறுபான்மை என்ற பேரில் தமிழர்கள் எங்ஙனம்நடத்தப்பட்டார்கள் என்பது குறித்து அமெரிக்காவிடம் எந்த விபரங்களுமே இருப்பதுபோல் தெரியவில்லை. ஆக,விடுதலைப்போராட்டததில் அதிவேகமாக வளர்ச்சி பெற்று வரும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமெரிக்காவுக்கும் அச்சுறுத்தலாக அமையலாம என்ற அச்ச உணர்வே இலங்கை மீது அமெரிக்கா கரிசணை கொள்வதற்கு காரணமாகும். அதேபோல் அமெரிககாவின் பிற்பலமே ஐதே முன்னணி அரசு சில சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு காரணமாக இருப்பதையும் இது விடயத்தில் அரசின் எல்லையை விடுதலைப் புலிகள் மீறும் பட்சத்தில் அதனை அமெரிக்கா கண் காணித்துக் கொள்ளும் என்பதும் இலங்கை அரசுக்கும் - அமெரிக்காவுக்குமிடையிலே ஏற்பட்ட எழுதப்படாத ஒப்பந்தமாகும்.

இதனை உறுதிப்படுத்துவதாக அமெரிக்க அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளின் இலங்கை விஜயம் அமைந்துள்ளது. கடந்த 22ந் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் ஆமிடேஜ் தென்மராட்சிப் பகுதிகுச் சென்று பார்வையிட்டார். முகமாலையிலுள்ள இராணுவ முன்னரங்கப் பகுதிகளுக்கும் விஜயம் செய்தார்.

தென்மராட்சியில் ஏற்பட்ட அழிவுகளை வியட்நாமுக்கு ஒப்பிட்ட அவர் அந்த அழிவுக்கு காரணம் யார் என்பதைக் கூறாமல் வெறுமனே விட்டு விட்டமை அரசுக்கு தனது ஆதரவு உண்டு என்பதனை வெளிப்படுத்துவதற்காகவே என்பதனையும் நாம் மறந்துவிட முடியாது.

இவற்றுக்கு மேலாக அமெரிக்க அமைச்சர்கள் படை முகாம்களுக்கு விஜயம் செய்வது படையினரை உற்சாகப் படுத்துவதற்கு என்பதனையும் தமிழினம் மறந்துவிடலாகாது.

# தேசிய இனங்களின் அபிலாசைகளை நிறைவேற்ற நிறுவன ரீதியாகவோர் அரசியற்றிட்டம் அவசியமானது

இலங்கையின் சுதந்திரத்தை அடுத்து இனத்தகராறு தொடர்பான விவகாரம் போன்று எந்தவொரு விவகாரமும் பொது சன அபிப்பிராயத்தில் ஆதிக்கம் செலுத்தி இருக்கவில்லை கடந்த தசாப்தங்களில் ஏனைய பிற பிரச்சினைகளைக் காட்டிலும் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அதிகளவு மகாநாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

அநேக நூல்கள், கட்டுரைகள் எழுதப்பட்டன. அதிக அளவில் அந்நிய நிதியும் திரட்டப்பட்டது. இவ்வகையில், நிலையான அமைதிக்கு இட்டுச் செல்ல வல்ல, ஐக்கியத்தை ஏற்படுத்தும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இக் கருத்தரங்கு வரவேற்கத் தக்க ஒரு முன்னெடுப்பாகும். எனினும் இம் முரண்பாடுதொடர்பான வரலாற்றை நாம் நோக்கும் போது, இவ் விவகாரம் தொடர்பாகக் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய எவ்வித தாக்கத்தையும் கல்விமான்கள் ஏற்படுத்தத் தவறியமை வருத்தத்திற்குரிய நிலையாகும். ஏனைய பல நாடுகளில், விசேடமாக நெருக்கடியான கால கட்டங்களில், பொது சனக் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் கல்விமான்கள் செல்வாக்குச் செலுத்திய சூழலுடன் நோக்கும் போது, எமது நாட்டு நிலை முழுமையாக முரண்பட்டதொன்றாகவே காணப்படுகிறது.

யில் அவை தத்தமக்குரியபணிகளைச் சிறப்பாகப் பேணிக் கொண்டன.

இதனால் இன முரண்பாடு பற்றிஎழுதியவர்களின்பெரும்பான்மையினர் இவ்விடயத்தில் எதிர்பார்த்த தாக்கத்தினை ஏற்படுத்தத்தவறினர். உள்ளார்ந்த உண்மைகளைக் கண்டறிவதைக் காட்டினும் வெறும் செய்திகளைத் தெரிவிப்பதில் மட்டுமே அவர்கள் திருப்தியடைந்தனர். இதனால் இவர்களின் எழுத்தாக்

இன்றைய இனமுரண்பாட்டின் மூலமாகச் சிங்களமும் பௌத்த தேசியவாதமும் தமிழ்தேசியவாதமும்காணப்படுகின்றன. சமூக ஒற்றுமை சமூகஒருங்கிணைப்பு, சமூகப் பொது நலன் என்பனவற்றுக்குப் பங்கம் விளைவிக்கும் விதத்தில் முரண்பாடுடன் செயற்படும் காரணிகளை நாம் இனங்காணல் வேண்டும். நாம் ஓர் உலக மயமாக்கப்பட்ட கிராமத்தில் இன்று வாழ்கின்றோம் என்ற உண்மையை உதாசீனம் செய்யக் கூடியவர் எவரும் எம்மத்தியில் இல்லை. அதாவது பல்வேறு பட்டகலாசாரங்களை, மரபுகளை அங்கீகரிக்கும் பன்மைத் தன்மையான ஓர் உலகில் நாம் இன்று வாழ்கின்றோம். இதனால் உணர்வு பூர்வமாகவும், பொறுப்புடனும், மனிதப் பண்புடனும் சிந்திப்பதற்கு எம்மை நாமே தயார்படுத்திக் கொள்ளல் வேண்டும். உயரிய பண்புகளாகிய பொறுமை, மதிப்பளித்தல், மரியாதை செலுத்துதல், சகிப்புத் தன்மை என்பனவற்றைப் பின்பற்றவும் பிரதிபலிக்கவும் நாம் பழகிக் கொள்ளல் வேண்டும். தனிநபர்களின் கருத்துக்கள் உள்ளார்ந்த ரீதியில் மாற்றத்திற்கு உட்படல் வேண்டும். ஆகவே இலங்கை பல தேசிய இனங்களை உள்ளடக்கிய நாடு என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்வது அவசியம். மேலாண்மை மிக்க தேசிய இனமானது பிற தேசியஇனங்களின் அடையாளங்களை உணர்ந்து அவற்றுக்குப் பாதுகாப்புத் தரவல்ல ஒரு தலைமைத்துவத்தை ஏற்கின்ற ஒரு நிருவாகப் பகிர்வு முறையை ஏற்படுத்த முயல வேண்டும். நிறுவன ரீதியான ஒரு அரசியல் யாப்பின் மூலமாகவே இது சாத்தியமாகும்.

> இலங்கையில் நிரந்தர சமாதானத்தை வலியுறுத்தும் நோக்கத்துடன் இலங்கைப்பல்கலைக்கழக கல்விமான்களைச் சார்ந்த கல்விமான்கள் பங்கு கொண்ட மகாநாடு ஒன்று 2002 ஆம் ஆண்டு யூலை28.ஆம்திகதிகொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது. இலங்கையின் பன்னிரண்டு பல்கலைக்கழகங்களைச் சார்ந்த 150 க்கும் மேற்பட்ட கல்விமான்கள்இம்மகாநாட்டில்கலந்து கொண்டனர்.யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்களை இணைப்பாளராகக் கொண்டு பத்து கல்விமான்கள் இம் மாநாட்டில் கலந்து கொண்டு தமது பங்களிப்பினை நல்கினர். அப்போது யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்பின் படிப்பு பீடாதிபதியும் வரலாற்றுத்துறைப் பேராசிரியருமான சி.க.சிற்றம்பலம் அவர்கள் 'அரசியல், அரசமைப்பு மற்றும் ஜனநாயகம்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை மகாநாட்டிற் சமர்ப்பித்து உரையாற்றினார்.

பேராசிரியர்
**சி.க. சிற்றம்பலம்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம

### பக்கச் சார்பானவை

மறுபுறம், பெரும்பாலான கல்விமான்களின் எழுத்தாக்கங்களை நுணுகி ஆராயின், உண்மைகளைத்தெளிவு படுத்துவதில் அவர்கள் தமது விருப்பத்திற்கேற்பச் செயற்பட்டமை, கருத்துக்களை நியாயப்படுத்துவதில் அவர்கள் இழைத்த தவறுகள் என்பன கவலைக்குரிய அம்சங்கள் ஆகும். இவர்களின் அநேகமான எழுத்தாக்கங்கள், பக்கச் சார்பானவையாகவும், பிரசார நோக்கிலே அமைந்தனவாகவுமே காணப்பட்டன. அவை உண்மைகளை வெளிக் கொணர்வதற்குப் பதிலாக யாதாயினும் ஒரு பிரிவினரது நிலைப்பாடு சரியானதா அன்றித் தவறானதா என்பதை நிரூபிப்பதிலேயேதான் கவனஞ் செலுத்தின; இவ்வகை

கங்கள் நடுநிலைமை நம்பகத் தன்மை அற்றனவாய் விளங்கின. இனமுரண்பாட்டின்பின்னணியிற் காணப்பட்டமனக் குழப்பத்தைத் தணிப்பதற்குப் பதிலாக அநேக எழுத்தாளர்கள் அதற்கு அழுத்தம் கொடுத்ததன் மூலம இன முரண்பாடுகளை வலியுறுத்தவே செய்தனர். இந்திய அமைதிகாக்கும் படையினரின் வருகை, தற்போதைய மூன்றாம் தரப்புமத்தியஸ்தம் என்பன சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பாகத் தமது பங்களிப்பை நல்குவதில் எமது கல்விமான்களின் இயலாமைக்கு மேலதிக எடுத்துக்காட்டுகள் ஆகின்றன.

### உலகமயமாக்கப்பட்ட கிராமம்

## தினசரி தியானம்

## உண்மையான கல்வி

கல்வியானது மாணாக்கர்களுக்கு இறைவனையும், மக்களையும் நேசிக்கக் கற்றுத்தர வேண்டும். உண்மையாய் இருக்கவும் ஒழுக்க நெறியில் நடக்கவும், பயமின்றியும், அடக்கமாகவும் இரக்கம் உள்ளவராக இருக்கவும் அறிவுறுத்த வேண்டும். நல்ல பழக்கங்களை மேற்கொள்ளவும், நல்ல சிந்தனை, நல்ல வாழ்க்கை, நல்ல செயல் தியாகம் ஆகியவற்றின் மூலம் இறையுணர்வு பெறும் அறிவைப்பெற அவர்களுக்குக் கற்றுத்தர வேண்டும்.

சுவாமி சிவானந்தர்

### தீர்க்க தரிசனமுள்ளவர்கள் முன்வரவேண்டும்

மேற்கூறிய பணி மிகமிகச் சிரமமான பணியாகும். நமது நாட்டுத் தேசிய ஊடகங்கள் தாராளவாதக் கருத்களை உள்வாங்கி அவற்றை மக்களுக்கு எடுத்துரைப்பதற்குப் பின்நிற்பதால் எமது கல்விமான்கள் தேசிய மொழிகளில் பிரசாரங்களை மேற்கொள்ளுவதன் மூலம் இக் கைங்கரியத்தை நிறைவு செய்ய முடியும். கல்விமான்களின் முயற்சிகளின் பலாபலன்களை மத நிறுவனங்களும் அரசியல்வாதிகளும் முன்னெடுத்துச் செல்ல முடியும். நேர்மை தொலைநோக்கு ஆகியவற்றைக் கடைப்பிடித்தல் மூலமே அரசியல் வாதிகள் சமூகத்தை அமைதியான பாதைக்கு இட்டுச் செல்ல முடியும். தேசத்தின் வடுக்களைக் குணப்படுத்தி அதனைச் சுபீட்சமான பாதைக்கு இட்டுச் செல்ல வல்லவர்கள் வெறும் அரசியல்வாதிகள் மட்டுமல்ல. தீர்க்க தரிசன மிக்க தலைவர்களே. இவர்களே இன்று நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முடிவு கட்ட வல்லவர்கள்.

### மொழிவழிப் பிரிவினை

நமது பூர்வீகவரலாற்றினை நோக்கும்போதுநமது நாடானது வரலாற்றின் ஆரம்ப காலந்தொட்டே பன்மொழி, பல்லினச் சமூகங்களைக் கொண்டநாடாகவே விளங்கி வந்துள்ளது. ஆரம்பகால அரச உருவாக்கம் மற்றும் பிற்பட்ட கால வரலாறு ஆகியன தொடர்பான ஆய்வுகள் மூலம் ஆதிகாலத்தில் விளங்கிய குறுநில மன்னராட்சி, பிராந்திய அரசுகள் பற்றி அறிய முடிகிறது. உறுதியான நிலையான போக்குவரத்து வசதியின்மை, திறன்மிக்க நிருவாகப் படி முறையாட்சியின்மை என்பன காரணமாகத் தீவு பூராக உள்ளடக்க வல்ல நடுவண் ஆட்சிக் கொள்கை மிக அரிதாகவே நடைமுறைப்படுத்தப்பட்டது. தமிழர்களை உள்ளடக்கும் தற்போதைய வட- கிழக்குப்பிராந்தியம்தமிழ்ப் பிராந்தியம் எனவும், சிங்களமக்களை உள்ளடக்கிய நாட்டின் ஏனைய பகுதிகளைக் கொண்ட மற்றொருபிராந்தியம் சிங்களப்பிராந்தியம் எனவும் இரு பிரதான மொழிரீதியான பிராந்தியங்களாக நாடு படிப்படியாகப் பிரிவுபடலாயிற்று. ஐரோப்பியரின் வருகையால் இத்தகைய போக்கு மேலும் துரிதப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் இன, மொழி ரீதியான இவ்விரு தேசிய இனங்களையும் நாடு பூராக ஒரு முகப்படுத்தப்பட்ட ஒரு சீரான, மையப்படுத்தப்பட்டநிருவாக அலகின் கீழ் முதல் முதலாகக் கொண்டுவந்த பெருமைபிரித்தானியரையே சாரும்.

இத்தேசிய இனங்களின் அடையாளத்தையும் தனித்துவத்தையும் அங்கீகரித்த பிரித்தானியர் இன அடிப்படையிலேதான் முதல் முதலாகச் சட்ட சபைக்கான நியமனத்தையும் நெறிப்படுத்தினர். இதனை அடுத்து சர்வசன வாக்குரிமை அடிப்படையிலான பிரதிநிதித்துவத்திற்கு வழிபிறந்தது இனமுரண்பாடு தொடர்பான பிரச்சினைகளை ஆழ்ந்து நோக்கின் பிரச்சினையின் ஆரம்பத்தை பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தின்போது தோன்றிய சுயநிருவாக ஆட்சிக்கான போராட்ட காலத்துடன் தொடர்புபடுத்த முடியும். எனவே இத்தகைய தகராறானது இருபதாம் நூற்றாண்டுக்குரிய தோற்றப்பாடாய் அமைவதுடன் இந்நூற்றாண்டுச் சூழலுக்கேற்ப இப்பிரச்சினையைத் தீர்க்கத்தவறியமையே இன்றையநிலைக்கு வழிகோலியுள்ளது. எனினும் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலகட்டத்தில், சிங்கள, தமிழ்தேசிய இனங்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதுதொடர்பாக இரு வேறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவின சமஷ்டி முறையி

(3ம் பக்கம் பார்க்க)

# புலிகளின் வேண்டுதலிலேயே ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்க அரசு முயற்சி

## மங்களசமரவீர குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் வேண்டுகோளுக்கு ஏற்பவே ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதான அமைப்பாளர் மங்களசமரவீர குற்றம் சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அரசாங்கத்தின் மீது அவர் இக்குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார். அச்செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கத்துக்கும் தமிமீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டபின்னரே இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிலைப்பாடாகும்.

அரசியல் யாப்பின் பிரகாரம் இடைக்கால நிர்வாகத்தை ஸ்தாபிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மட்டுமே உண்டு. எனினும் நாட்டின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்பதே நாட்டு மக்கள் அனைவரதும் விருப்பமாகும் என்றும் மங்கள சமரவீரமேலும் தெரிவித்துள்ளார். (த)

## வட-கிழக்கு வைத்தியர் இடர்கால கொடுப்பனவு அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றிவரும் வைத்தியர்களுக்குஇடர்காலக் கொடுப்பனவு வழங்குவது தொடர்பான அறிக்கையை சுகாதார அமைச்சர் பி. தயாரட்ண அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

இக்கொடுப்பனவு வழங்குவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதும் அவ்வறிக்கை நிதியமைச்சர் கே.என்.சொக்ஸியிடம்சமர்ப்பிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றி வரும் வைத்தியர்களுக்கு மாதாந்தம் சுமார் 10 ஆயிரம் ரூபாவை இடர்கால கொடுப்பனவாக வழங்குவதற்கான யோசனை இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுளளது.

அண்மையில் இப்பிரதேச வைத்தியர்கள் இது குறித்து மேற் கொண்ட வேலை நிறுத்தம் சுகாதார அமைச்சின்செயலாளரும், அரசியல்வாதிகளும் மேற் கொண்ட பேச்சு வார்த்தைகளை அடுத்து கைவிடப்பட்டது தெரிந்ததே. -உ8)

## கரப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் 6 பேர் கொண்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி நேற்று ஆரம்பமானது.

கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று இரவு 8.00 மணிக்கு நவஜீவன் உடுப்பிட்டி வி.க எதிர் இளைஞர் வறணி வி. கழும், ாலை 8.00 மணிக்கு மகாத்மா காந்தி சலட்டி வி.க. எதிர் நீர்வேலி மத்தி வி க ஆகியன மோதவுளளன.

★ ★ ★

கலைமதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டம்(செற்ரப் கேம்) நேற்று ஆரம்பமானது.

கலைமதி விளையாட்டு மைதானத்தில் இன்று இரவு 8.00 மணிக்கு அச்சுவேலி சில்வஸ்ரரார் வி. க எதிர் நீர்வேலி ஐக்கிய வி.க ஆகியன மோதவுளளன.

(உ-3)

## நகைக்கடை உரிமையாளர் கைது

(யாழ்ப்பாணம்)

களவுநகையை கொள்வனவு செய்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் யாழ் நகரப்பகுதி வர்த்தக உரிமையாளர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஒன்றரை மாதத்திற்கு முன்னர் இடம்பெற்ற திருட்டுத் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட ஒருவர் தான் களவெடுத்த நகையை நகைக்கடை ஒன்றில் விற்றுவிட்டதாக கூறியதன் பிரகாரமே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (உ-19)

## மரங்கள் கொண்டுவர தடைவிதிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னிபெருநிலப்பரப்பிலிருந்து யாழ்குடாநாட்டுக்கு பாரஊர்திகள்மற்றும் உழவு இயந்திரங்கள் மூலம் தமது அனுமதியின்றி பச்சைமரங்கள் தடிகள்என்பனகொண்டுவரப்படுவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாக தமிழீழவனவள பாதுகாப்புப்பிரிவினர் அறிவித்துள்ளனர்:

வனவளத்தைப் பாதுகாக்கும் இப்பாரியபணிக்கு சகல வழிகளிலும் பூரணஒத்துழைப்பை வழங்குமாறுவனவளப் பிரிவினர் பொதுமக்களைக் கேட்டுள்ளனர். (த)

## வீதி புனரமைப்புக்கு இரண்டுமில்லியன்

(கொழும்பு)

குடாநாட்டு வீதிகளைத் திருத்தியமைப்பதற்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் யாழ்மாநகரசபைக்கு 2மில்லியன் ரூபா பொறுமதியான காசோலை நேற்று வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு சென்றுள்ள யாழ்ம நகரசபை முதல்வர் செ.கந்தையன் புனர்வாழ்வு அமைச்சிலிருந்து காசோலையைப் பெற்றுக்கொண்டார்.

(த)

## இன்று பகல்நேர மின்வெட்டு அமுல்

(யாழ்ப்பாணம்)

இன்று காலை 9.00மணி தொடக்கம் மாலை4.00மணி வரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு,அச்சுவேலி, வடமராட்சிப்பகுதி, கந்தரோடை, சண்டிலிப்பாய், சங்கானை, வட்டுக்கோட்டை, தொல்புரம்,பண்டத்தரிப்பு,மானிப்பாய்,உடுவில் ஆகிய பகுதிகளுக்கும்,

இதேநாளில் காலை 9. 00 மணி தொடக்கம்பி.ப 1. 00 மணிவரை யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதி கல்வியங்காடு,இருபாலை,கோப்பாய்,நீர்வேலி,உரும்பிராய், திருநெல்வேலி, மருதனார்மடம்,இணுவில்,தாவடி, சுதுமலை, ஆனைக்கோட்டை, கொக்குவில், கோண்டாவில், நவாலி,நாச்சிமார் கோவில், கோம்பயன்மணல் ஆகிய பகுதிகளுக்கும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(உ-3)

## வினைத்திறன் தடை காண்பரீட்சை

வகுப்பு II'ஆ' இல் கடமையாற்றும் குடும்பநல சேவை உத்தியோகத்தர்கானவினைத்திறன் தடைகாண் பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதிஞாயிற்றுக்கிழமை யாழ். தாதியர் பயிற்சி பாடசாலையில் நடைபெற உள்ளதாக சுகாதார சேவைகள்நலன்புரிபோசாக்கு அமைச்சின் பரீட்சைகளின் ஆணையாளர் அறிவித்துள்ளார்;

இப்பரீட்சைக்கு தோற்ற இருக்கும் குடும்பநலசேவை உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தனிதனியாக தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-252)

## சு. ப

ஜோர்ச் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சமாதான நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்நகர்த்தும் விடயங்கள் தொடர்பாகவும் அரசும்புலிகளும் ஒருவருக்கொருவர் நம்பிக்கையுடன் செயற்படுவதன் அவசியம் குறித்தும் இருதரப்பினரும் ஆலோசனைநடத்தினர்.

இதேவேளை இச்சந்திப்பு சுமூகமானமுறையில் இருதரப்பு நம்பிக்கையை கட்டியெழுப்பும் நோக்கில் இடம்பெற்றதாக அரசியல்துறைப் பொறுப்பாளர் சு ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்- (இ)

## ஜோசப்

விடுத்தார்.

அதேவேளை லண்டனுக்குச் செல்லும் ஜோசப் பரராஜசிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தையும் சந்தித்துப் பேசவுள்ளார். (த)

## தமிழ்க்

பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

ஏற்கனவே பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்த வீரசிங்கம் சபேசன் என்பவரது வழக்கும் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

இதேவேளைசட்டமாஅதிபரினால் வாபஸ் பெறப்பட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்ட அரசியல் கைதிகள் பலர் ஏற்கனவே பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும் (த-19)

## தீவிர பரிசோதனை

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி தேர்,தீர்த்த உற்சவங்களின் போது கோவில் சுற்றாடலில் அமைக்கப்பட்ட உணவு விற்பனை நிலையங்கள்,சிற்றுண்டி விற்பனைக் கடைகள் இனிப்புக்கடைகள், ஐஸ்கிறீம் விற்பனைக் கடைகள் என்பன பொதுச்சுகாதாரப் பரிசோதகர் குழுவினால் அடிக்கடி தீவிரபரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. (உ-252)

## அன்ரன்

யப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் தொடர்பாகவும் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் பேசி முடிவெடுக்கும் நோக்கிலேயே பாலசிங்கம் வன்னி வரவுள்ளதாகத் தெரியவருகிறது-

இதேவேளை விடுதலைப் புலிகளின் வடக்கு கிழக்கு மாகாண முக்கிய தளபதிகள் வன்னியில் கூடியுள்ளதாக ஏஜென்சி நிறுவனமொன்று செய்தி வெளியிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.(இ)

## ஹெவ்டே

விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழச்செல்வனை ஹெவ்டே கிளிநொச்சியில் உள்ள அரசியல்துறை நடுவப் பணியகத்தில் சந்தித்துப் பேசவுள்ளார்.

இச்சந்திப்பில் புரிந்துணர்வு உடன்படிக்கையை அமுல் படுத்துவதில் உள்ளசிக்கல்கள் குறித்து ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ)

## அரசு- புலிகள்

போது வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம், அடுத்த கட்டப் பேச்சுகளுக்கான நிகழ்ச்சிநிரல் தயாரிப்பு, புரிந்துணர்வு உடன்படிக்கையில் நிறைவேற்றப்படாத விடயங்களை அமுல் படுத்தல், வடக்கு கிழக்கு மக்களின் மீள் குடியேற்றம், மற்றும் அன்றாடப்பிரச்சினைகள் குறித்து ஆராயப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது:

இப்பேச்சுக்களில் அரசாங்கத்தரப்புப் பிரதிநிதிகளாக பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட, துறைமுகங்கள் கப்பற்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம், சமாதானச் செயலகச் செயலாளர் நாயகம் பேணாட் குணதிலக, மற்றும் பிரதமரின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோர் பங்குபற்றுவரென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை விடுதலைப் புலிகள் சார்பாக பேச்சுக்களில் ஈடுபடுவோரை விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் பேசி முடிவு செய்வாரென்று தெரியவருகிறது

இதேவேளை தாய்லாந்து நகரில் மூன்று தினங்கள் நடைபெறவுள்ள முதற்சுற்றுப் பேச்சுவார்த்தையை நோர்வே அரசு கண்காணிக்கும். (இ)


### பெயர் மாற்றம்

426 (302), காங்கேசன் துறை வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்கி வந்த ஆங்கிலக் கல்வி நிலையம் (ஆங்கிலம் மட்டும்) தற்போது ROYAL COLLEGE OF JAFFNA என்ற பெயரில் ஆண்டு 1 – மேற்படிப்பு வரை மாலை வகுப்புகள் நடைபெறுகின்றன-

தலைமை ஆசிரியர்.

(5847)

### திருமறைக் கலாமன்றம்
வழங்கும்
### ஸ்பார்ட்டக்கஸ்
(நாடகம்)

ஓகஸ்ட் 30, 31

செப். 01. 2002

(வெள்ளி, சனி, ஞாயிறு)

மன்ற அரங்கில் மாலை 6.45மணி (4867)

### யாழ்மாவட்ட சிகைஒப்பனையாளர் சங்கம் தீவக அங்கத்தவர்களுக்கான அறிவித்தல்

18 08 2002இல்நடைபெற்ற கூட்ட தீர்மானத்தின் படி 25.08 2002தொடக்கம்ஞாயிற்றுக்கிழமைகளில் கடைகள் மூடப்படவேண்டும் கிராமியத் தொழிலாளருக்கும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறைநாளாகும் என்பதை அறியத்தருகின்றோம்.

அ.அல்பேட்
செயலாளர்

209,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-5843)

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியில் சிற்றிபோய் தையலகத்திற்கு அருகில் உள்ள இரு பெரிய கடைகளும் அதற்குப் பின்னால் உள்ள ஸ்ரோர் அதனுடன் கூடிய சிறிய கடை என்பன வாடகைக்கு உண்டு.

தொடர்பு;
இராசையா சாவித்திரி
65,சிவன்,பண்ணை, வீதி
யாழ்ப்பாணம்

(5782)

### பதவி வெற்றிடம்

★ சிற்றூழியர்கள்
(பகல் இரவு கடமை)

★ 'ஓவ்செற்' இயந்திர இயக்குநர்
(அனுபவமுள்ளவர்கள் மட்டும்)

பொருத்தமானவர்கள் 25.08.2002 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

நிர்வாக உத்தியோகத்தர்
வலம்புரி
15, வெள்ளாந் தெரு,
வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி அருகாமை
யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 24-08-2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.